SELECTION COMMITTEE (INDIAN MEDICINE),

DIRECTORATE OF INDIAN MEDICINE AND HOMOEOPATHY, CHENNAI -106.

TENTATIVE ONLINE COUNSELLING SCHEDULE FOR ROUND-2

7.5% PREFERENTIAL RESERVATION FOR GOVERNMENT SCHOOL STUDENTS FOR UG-AUSH (B.A.M.S., B.U.M.S., B.S.M.S. & B.H.M.S.) COURSES ADMISSION FOR 2026-2027 SESSION

ROUND	PROCESS	START DATE & TIME	END DATE & TIME
2	Registration for upgradation	04.10.2026, 11:00 A.M.	06.10.2026, 05:00 P.M.
	Processing and Display of Virtual Vacancies	07.10.2026	
	Choice Filling & Choice Locking for Round - 2	08.10.2026, 11:00 A.M.	10.10.2026, 05.00 P.M.
	Processing of Seat Allotment	11.10.2026	
	Result of Round -2	12.10.2026	-
	Download of Provisional Allotment Order	13.10.2026	16.10.2026, 05:00 P.M.
	Reporting Date & Time	On or Before 16.10.2026 upto 05.00 P.M.	

INSTRUCTIONS	
Sl. No.	***Guidelines for Online Counselling – AUSH-UG Medical Degree Courses (7.5%)***
1.	*Do not share your login ID, password, or OTP with anyone.*
	login ID, password, மற்றும் OTP ஆகியவற்றை யாரிடமும் பகிரவேண்டாம்.
2.	*Candidates who have not participated in Round-I AUSH-UG 7.5% Offline Counselling or Participated and did not pay the processing fee should pay a non-refundable processing fee of Rs. 500/- as a onetime payment before choice filling through online mode (via Debit Card/Credit Card/Net Banking).* *The Choice filling option will be enabled only after successful payment of processing fee.*
	AUSH-UG பட்டப்படிப்புகளுக்கு 7.5% இடஒதுக்கீட்டிற்கான முதல்கட்ட நேரடி கலந்தாய்வில் (Offline Counselling) கலந்து கொள்ளாதவர்கள் அல்லது கலந்து கொண்டு செயலாக்கக் கட்டணத்தை (Processing Fee) செலுத்தாதவர்கள், தங்களது விருப்பத் தேர்வை (Choice Filling) தேர்வு செய்வதற்கு முன்பாக, ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) திரும்பப் பெறமுடியாத

	செயலாக்கக் கட்டணத்தை (Non-Refundable Processing Fee) ஒரு முறை மட்டும், இணையவழியில் (Debit Card / Credit Card / Net Banking மூலம்) செலுத்த வேண்டும். பொருந்தும் செயலாக்கக் கட்டணத்தை வெற்றிகரமாக செலுத்தியபின்னரே விருப்பத்தேர்வுகளைப் (Choice Filling) பதிவு செய்வதற்கான செயலாக்க வசதி திறக்கப்படும்.
3.	*The candidates who have already registered for first Round of Offline counselling and paid Rs.500/- as Processing fee need not pay again.*
	முதல் கட்ட நேரடி கலந்தாய்வில் கலந்துகொண்டு ரூ.500/-யை செயலாக்கக் கட்டணமாக செலுத்தியவர்கள் மீண்டும் செயலாக்கக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.
4.	*Candidates who had registered for Round-1 and did not get any seat allotted; candidates who have been allotted but not joined in Round-1 can participate in the Round-2.*
	முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு இடம் கிடைக்காதவர்கள் மற்றும் முதல் கட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு இடம் கிடைத்தும் கல்லூரியில் சேராதவர்கள் இந்த இரண்டாம் கட்ட கலந்தாய்வில் கலந்துகொள்ளலாம்.
5.	*Candidates who have allotted and joined a seat in the 1st Round of offline Counselling and wish to opt for upgradation should register in the REGISTRATION WINDOW to confirm their participation in Round 2 so as to include their seats as Virtual Vacancies. But, they need not to pay the Processing fee again. Candidates will not be eligible for upgradation without registration in the* ***"Registration Window"****.*
	முதல் கட்ட நேரடிக் கலந்தாய்வில் கலந்துகொண்டு இடங்களை தேர்வு செய்து, அக்கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் வேறு கல்லூரிக்கு மாறுதல் செய்ய விரும்பினால் இக்கலந்தாய்விற்கு REGISTRATION WINDOWவில் பதிவு செய்து உறுதிசெய்துகொள்ள வேண்டும், இதற்கு மீண்டும் செயலாக்கக் கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. அப்போதுதான் மெய்நிகர் காலியிடம் (Virtual Vacancies) பட்டியலில் அவர்கள் பெயர் வரும். இல்லையென்றால் அவர்கள் இரண்டாம் கட்ட கலந்தாய்வில் பங்கேற்க முடியாது.
6.	*The candidates WHO ARE WILLING TO RETAIN THEIR SEAT, which was allotted in the 1st Round of Offline Counselling NEED NOT PARTICIPATE IN THIS ONLINE COUNSELLING.*
	முதல் கட்ட நேரடிக் கலந்தாய்வில் கலந்துகொண்டு, இடம் கிடைத்த மாணவர்கள் அக்கல்லூரியிலேயே படிப்பை தொடர விரும்பினால் இக்கலந்தாய்வில் (ONLINE) கலந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை.
7.	*Candidates who have allotted and joined a seat in the 1st Round of offline Counselling and willing for re-allotment of Colleges have to register and fresh Choice filling and locking should be done. The seat allotted to them in the First Round of Offline Counselling will be made available for the choice filling of other candidates in the 2nd round of Online Counselling.*
	முதல் கட்ட நேரடி கலந்தாய்வில் கலந்துகொண்டு இடங்களை தேர்வு செய்து, அக்கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் வேறு கல்லூரிக்கு மாறுதல் செய்ய விரும்பினால் இக்கலந்தாய்விற்கு பதிவு செய்து புதிய விருப்பக் கல்லூரியை தேர்வு செய்யலாம். முதலாம் சுற்று நேரடி கலந்தாய்வில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம், 2-ஆம் சுற்று இணையவழி கலந்தாய்வில் மற்ற மாணவர்களின் விருப்பத் தேர்வி காகத் திறந்திருக்கும்.
8.	*The candidates who have not participated/not allotted/allotted but not joined candidates in first Round of offline counselling can participate in this counselling. But, the candidates should have already applied for this Course in Tamil Nadu AYUSH Selection Committee and their names should be in the Merit List published.*

	முதல் கட்ட நேரடி கலந்தாய்வில் கலந்துகொள்ள தவறியவர்கள், முதல் கட்ட நேரடி கலந்தாய்வில் கலந்துகொண்டு இடம் கிடைக்காதவர்கள் மற்றும் முதல் கட்ட நேரடி கலந்தாய்வில் கலந்துகொண்டு இடம் கிடைத்தும் கல்லூரியில் சேராதவர்கள் இக்கலந்தாய்வில் கலந்து கொள்ளலாம். ஆனால், அவர்கள் தமிழ்நாடு ஆயுஷ் தேர்வுக்குழுவின் ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்து இந்த ஆண்டிற்கான தரவரிசைப்பட்டியலில் இடம் பெற்றிருக்கவேண்டும்.
9.	*Candidates should be careful and attentive while selecting their choices.*
	விண்ணப்பதாரர்கள் தங்கள் விருப்பங்களைத் தேர்ந்தெடுக்கும்போது கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும்.
10.	*The 7.5% Seat Matrix for UG-AUSH Medical Degree Course will be displayed on the official websites.*
	UG-AUSH பட்டப்படிப்புகளுக்கான *7.5%* இருக்கை அமைப்பு *(Seat Matrix)* அதிகாரப்பூர்வ இணையதளங்களில் வெளியிடப்படும்.
11.	*The Selection Committee will not be responsible for internet or connectivity issues faced by the candidates.*
	இணையம் அல்லது இணையஇணைப்பு தொடர்பான பிரச்சனைகளுக்கு தேர்வுக் குழு பொறுப்பாகாது.
12.	*Admission will be carried out through online counselling only, strictly based on merit rank and Reservation Rules of Tamil Nadu Government.*
	கலந்தாய்வு மற்றும் சேர்க்கை இணையவழியில் மட்டுமே நடைபெறும், இது தரவரிசை மற்றும் தமிழ்நாடு அரசு, இட ஒதுக்கீட்டு விதிகளின் அடிப்படையில் மட்டுமே நடைபெறும்.
13.	*Special Category Candidates who have not been allotted seats in Special Category Reservation can lock their Choice filling for 7.5% Reservation Category as per the 7.5% Merit List.*
	சிறப்பு இட ஒதுக்கீட்டில் இருக்கைகள் ஒதுக்கப்படாத விண்ணப்பதாரர்கள், தங்கள் விருப்பத் தேர்வை *(choice filling) 7.5%* இடஒதுக்கீட்டிற்கான பிரிவில் உள்ள தரவரிசைப்படி தேர்வு செய்யலாம்.
14.	*The step-by-step procedure for online counselling will be published on the official website.*
	இணையவழி கலந்தாய்விற்கு கடைபிடிக்கவேண்டிய நடைமுறைகள் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.
15.	*Once a candidate locks the choices, further changes will not be allowed. Changing the college after choice locking is not allowed for any reason.*
	விண்ணப்பதாரர் ஒருமுறை விருப்பங்களை உறுதி செய்த பிறகு, மேலும் மாற்றங்கள் அனுமதிக்கப்படாது. விருப்பங்களை உறுதி செய்த பிறகு கல்லூரியை மாற்றுவதென்பது எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படாது.
16.	*The Candidate selected for admission should give a self-declaration form at the time of the reporting to the concerned College. He / she is liable for forfeiture of selection / admission if suppression of facts / false informations found at any time during or after the admission to the course.*
	சேர்க்கைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர், சம்பந்தப்பட்ட கல்லூரியில் சேரும் போது சுய-அறிக்கை படிவம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். சேர்க்கையின் போது அல்லது பின்னர் எந்தவொரு நேரத்திலும் உண்மைகளை மறைத்தல் / தவறான தகவல்கள் அளித்தல் ஆகியவை கண்டறியப்பட்டால், அவரது தேர்வு/சேர்க்கை ரத்து செய்யப்படும்.

17.	*Allotted candidates in Government Colleges must download their provisional allotment order and report to the concerned Medical College/Institution within the given date and time.*
	அரசு கல்லூரிகளுக்கு ஒதுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் தங்கள் தற்காலிக ஒதுக்கீட்டு உத்தரவை பதிவிறக்கம் செய்து, குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் சம்பந்தப்பட்ட மருத்துவக் கல்லூரி/நிறுவனத்தில் சேரவேண்டும்.
18.	*During reporting, Candidates must submit their original certificates along with xerox copies to the concerned Colleges. If a candidate fails to report to the Head of the Institution within the stipulated time, the allotment and admission will be automatically cancelled without prior notice.*
	கல்லூரியில் சேரும் போது, விண்ணப்பதாரர்கள் தங்கள் அசல் சான்றிதழ்களையும், நகல்களையும் சம்பந்தப்பட்ட கல்லூரியில் சமர்ப்பிக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்குள் கல்லூரி முதல்வரிடம் தெரிவிக்கத் தவறினால்/சேரத்தவறினால், ஒதுக்கீடு மற்றும் சேர்க்கை முன்னறிவிப்பின்றி தானாகவே ரத்து செய்யப்படும்.
19.	*Note: In case of any doubt in the instructions, the English version of these instructions will be treated as final.*
	குறிப்பு: மேலே உள்ள குறிப்புகளில் ஏதேனும் சந்தேகம் இருப்பின், ஆங்கில பதிப்பு இறுதியானதாக கருதப்படும்.

Secretary,
Selection Committee,
Directorate of Indian Medicine and Homoeopathy,
Arumbakkam, Chennai-600106.